Registered as News Paper பக்கங்கள் 04 விலை ரூபா: 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 03 (20 - 10 - 1991) ஞாயிற்றுக்கிழமை ஓசை: 244

## பயிலுனர் ஆசிரியர்களை சேர்க்க விசேட ஒழுங்கு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பயிலுனர் ஆசிரியர்களைச் சேர்க்க விசேட வசதி செய்யப்பட்டுள்ளதாக கல்விச் சேவைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. இதனை வடக்கு கிழக்கு பயிலுனர் சகல கல்விக் காரியாலயங்களுக்கும் கல்விச் சேவைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. ஆசிரியர் தெரிவுக்கான பரீட்சைக்கு தோற்ற விரும்புவோர் கல்விக் காரியாலயங்களுக்கு சென்று விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் கல்விச் சேவைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. கணித, விஞ்ஞான மற்றும் பொதுவான ஆசி (4 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் வன்முறை ஒழிய அரசிற்கு ஆயுதஉதவியை நிறுத்துக!

## ஏரிக்கரை பத்திரிகை மீது றொனி டி. மெல் வழக்கு

(கொழும்பு)

ஏரிக்கரைப் பத்திரிகைகள் நிறுவனம் மீது முன்னாள் நிதி அமைச்சர் றொனி டி மெல் நஷ்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருக்கும் இந்த வழக்கில் 40,000,000 ரூபா நஷ்ட ஈடு கோரப்பட்டுள்ளது.

18-9-91 இலுமின தினகரன் சண்டே ஒப்சேபர் மற்றும் சிறிலங்கா நியூஸ் பத்திரிகையில் ஆகஸ்ட் 21ல் வெளியான கட்டுரைகளில் தன்னைப் பற்றி அவதூறாக [4 ஆம் பக்கம் பார்க்க]

## சுதந்திரக் கட்சி செயலாளர் பதவி நீக்கம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து ஜே. ஆர். பி. சூரியப்பெரும நீக்கப்பட்டிருப்பதாகவும், அவரது பதவிக்கு கேகாலை மாவட்ட எம். பி யான தர்மசிறி சேனநாயக்காவைத் தெரிவு செய்வது எனவும் அண்மையில் கூடிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு முடிவு செய்துள்ளது.

## வெற்றிகள் பலவற்றிற்கு வித்திட்ட மேஜர் டிசான்

மணலாறு மாவட்டத்தில் உள்ள கொக்குத்தொடுவாயில் சிறிலங்கா படையினருடன் கடந்த 16 ஆம் திகதி நடைபெற்ற மோதலில் வீரமரணமடைந்த மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூரைப் பிறப்பிடமாகக் கொண்ட மேஜர் டிசான் (சேந்தப்போடி இலங்கநாதன்) இந்திய - சிறிலங்கா இராணுவத்துக்கெதிரான பல தாக்குதல்களின் முக்கிய பங்காற்றியவராவார்.

1986 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைந்து கொண்ட இவர், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் நடைபெற்ற இராணுவத்தினருக்கெதிரான முக்கிய பல தாக்குதல்களில் பங்குபற்றித் தீரமுடன் போராடியுள்ளார். குறிப்பாக 1988 ஆம் (4 ஆம் பக்கம் பார்க்க)



## சர்வதேச நாடுகளிடம் லண்டன் மனித உரிமைகள் குழு கோரிக்கை

(லண்டன்)

இலங்கையில் வன்முறையை ஒழித்துக் கட்டுவதானால் ஆயுத உதவியையும், இராணுவ நிபுணத்துவ தொழில்நுட்ப வசதிகளையும் சிறிலங்காவிற்கு வழங்குவதை நிறுத்துமாறு லண்டனில் இயங்கும் மனித உரிமைகள் குழுவொன்று சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையில் வன்முறை தொடர்வதற்கு சர்வதேச நாடுகளிடம் அதற்குக் கிடைக்கும் கட்டுப்பாடற்ற ஆயுத விநியோகமும், இராணுவ நிபுணத்துவ, தொழில் நுட்ப ஆலோசனைகளுமே காரணம் எனச் சுட்டிக் காட்டியுள்ள இந்த மனித உரிமைகள் அமைப்பு இலங்கையில் சர்வதேச நாடுகள் அவற்றை நிறுத்தின் வன்முறையை முடிவிற்குக் கொண்டு வரலாம் எனவும் தெரிவித்துள்ளது.

ஆயினும் இலங்கைக்கு ஆயுதங்களை விற்பனை செய்யும் அல்லது விநியோகம் செய்யும் நாடு அல்லது நாடுகள் எவை என்பதைப் பெயரிட்டுக் காட்ட (4 ஆம் பக்கம் பார்க்க)

## கொட்டடியில் விமானக் குண்டு வீச்சு

## புலிகளின் எதிர்த்தாக்குதலால் விமானங்கள் உடன் திரும்பின

(யாழ்ப்பாணம்)

யாழ். கொட்டடிப் பகுதியில் சிறிலங்கா விமானப் படைத் தலைத் தொடர்ந்து இவ்விமானங்கள் இலக்குகள் மீது குண்டு வீசாததோடு விரைவிலேயே உலங்குவானூர்தி ஒன்றும், சியாமாசெட்டி ஒன்றும் யாழ் நகரை நோட்டமிட்டவாறு இருந்தது

## சுகாதாரம் பேணப்படாவிடில் கொடிய நோய்கள் பரவும்

(யாழ்ப்பாணம்)

அகதிமக்கள் தங்கியிருக்கும் இடங்களில் சுகாதாரத்தைப் பேண வேண்டும் அல்லாவிடில் கொடிய நோய்களினால் பாதிப்படைய நேரிடும் என்று அரச சார்பற்ற அமைப்பு ஒன்றைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பல பாடசாலைகளில் மலசல கூடங்கள் போதாமையினால் அப்பகுதி அசுத்தமடைய நேரிடுகிறது என்று குறிப்பிட்ட அவர் அகதி மக்கள் ஒரே இடத்தில் குவிந்து தங்காமல் பல இடங்களில் வசதியைப் பொறுத்து தங்க வேண்டும் என்று தெரிவித் (4 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்திற்குப் போதிய மருத்துவவசதி இல்லையாம்

(பொலநறுவை)

கிழக்கு யுத்த முனையில், குறிப்பாக பொலநறுவை மாவட்ட எல்லைப்புற யுத்தமுனையில் காயப்படும் இராணுவத்தினருக்கு போதிய மருத்துவ வசதிகள் கிடைப்பதில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

பொலநறுவ ஆதார வைத்திய சாலையில் அறுவை வைத்திய நிபுணர்களும், மயக்க மருத்துவ நிபுணர்களும் இல்லை. இதனால் வெலிகந்தை தாக்குதலில் காயப்பட்ட இராணுவத்தினர் கடந்த புதனன்று கொழும்புக்கு மாற்றப்பட்டனர். ஒரு கப்டனும் இரண்டு சிப்பாய்களும் கடந்த புதனன்று இவ்வாறு கொழும்பு ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இந்த வெற்றிடங்களை நிரப்புமாறு கேட்டும், அந்த இடங்கள் நிரப்பப்படவில்லை என்று பொலநறுவ வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன

## பி. பி. ஸி. செய்தியில்

...னார் ஆகிய மாவட்டங்களில் நடைபெற்ற இராணுவத்தினருக்கெதிரான முக்கிய பல தாக்குதல்களில் பங்குபற்றித் திறமுடன் போராடியவர் ...னார். குறிப்பாக 1988 ஆம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வெளிவாரி பட்டப்படிப்பிற்கு 1325 மாணவர் விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப் பரீட்சைக்கு மொத்தம் 1325 மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர் என்றும் இம்மாணவர்களுக்கான பட்டப்படிப்பு எதிர்வரும் 22 ஆம் திகதி உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாகவும் இப்பல்கலைக்கழகத்தின் வெளிவாரிக் கல்வித் தொடர்பாளர் பேராசிரியர் பாலசுந்...

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பதவி உயர்வு வழங்க

## பாதிக்கப்பட்ட ஊழியர்கள் உயிருடன் இல்லை

(யாழ்ப்பாணம்)

சிங்கள மொழிச் சட்டத்தால் வேலை இழந்த அல்லது உயர் பதவி இழந்த தமிழர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பும், உயர் பதவியும் வழங்கப்படும் என்று பொது நிர்வாக உள்ளூராட்சி அமைச்சு அறிவித்திருக்கின்ற போதி...

(4 ஆம் பக்கம் பார்க்க)

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டடிப் பகுதியில் சிறிலங்கா விமானப் படை விமானங்கள் நேற்றுக்காலை தாக்குதல் நடாத்தின. ஆனால் விடுதலைப் புலிகளின் தாக்குதலைத் தொடர்ந்து இவ்விமானங்கள் இலக்குகள்மீது குண்டு வீசாதோடு விரைவிலேயே திரும்பியும் சென்றன.

நேற்றுக் காலையிலிருந்தே சிறிலங்கா விமானப் படை உலங்குவானூர்தி ஒன்றும், சீ பிளேன் ஒன்றும் யாழ் நகரை நோட்டமிட்டவாறு இருந்தது. உலங்குவானூர்தி மண்டைதீவு, அலைப்பிட்டிப் பகுதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாண கரையோர மக்கள் பெருமளவில் இடம் பெயர்வு

(குருநகர்)

நேற்று சனிக்கிழமை காலை 9-00 மணியளவில் இருஹெலிகளும், சீ பிளேன் ஒன்றும், 10-00 மணியளவில் இரு பொம்பர்களும், ஹெலிகளும் பலாலி, ஊர்காவற்றுறை முகாம்களில் இருந்து நடாத்தப்பட்ட எறிகணைத் தாக்குதல்களாலும் பீதியடைந்த குருநகர், யாழ்நகரை அண்மித்த கொட்டடி, கண்ணாபுரம், நாவாந்துறை, வெள்ளாந்தெரு பகுதி மக்கள் பெருமளவில் பாதுகாப்புத் தேடி இடம் பெயர்ந்துள்ளனர்.

யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி, திருக்குடும்பக் கன்னியர் மடம், நாச்சிமார் கோவிலடி, பெரிய புலம் மகாவித்தியாலயம், கொழும்புத்துறை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் நகர், கொட்டடிமீது எறிகணைத் தாக்கு

(யாழ்ப்பாணம்)

பலாலி, ஊர்காவற்றுறை இராணுவமுகாம்களில்இருந்து கொட்டடி, யாழ் நகர்ப் பகுதிகளை நோக்கி நேற்றுக் காலையும் மாலையும் எறிகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

அவற்றில் ஒன்று கொட்டடி நமச்சிவாய வித்தியாலயத்தில் வீழ்ந்து வெடித்தது. இதனால் சிறுவன் ஒருவன் உட்பட மூவர் காயமடைந்ததாக தெரிய வருகின்றது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

இல்லை. இதனால் வெலி... வித்தன

## பி. பி. ஸி. செய்தியில் இனவாதம் கலந்துள்ளது - மலேசிய பிரதமர்

(கோலாலம்பூர்)

நல்ல அரசாங்கம் எது என்பது பற்றி பி.பி.ஸி செய்தி ஸ்தாபனத்தின் கணிப்பில் சிறிளவில் இனவாதம் கலந்திருக்கிறது என்று மலேசியப் பிரதமர் எம். மூகமட் கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஹராரேயில், பொதுநலவாய நாடுகள் மாநாட்டில் கலந்து கொண்ட மலேசியப் பிரதமர் இவ்வாறு தெரிவித்தார் என ஹராரே பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னர், பி. பி. ஸி. பொதுநலவாய அரசுகளில் மலேசிய அரசு மோசமானது என்று விமர்சித்திருந்தது.

மலேசியாவில் விசாரணையின்றி மக்கள் தடுத்து வைக்கப் படுவதாகவும் பி.பி.ஸி விமர்சித்திருந்தது.

உச்சி மாநாட்டின் போது அவர் பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில், இங்கிலாந்துச் சட்டங்களைத்தான் தாம் பின்பற்றுவதாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

## கிளிநொச்சியில் ஊரடங்கு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் இன்று காலை ஐந்து மணி தொடக்கம் ஊரடங்கு உத்தரவு அமுலுக்கு வரும் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

# ஜெர்மனியில் புதிய நாஜிக்கள்; வெளிநாட்டவர்கள் மீது தாக்குதல்

(கொழும்பு)

ஜெர்மனிக்குப் பயணத்தை மேற்கொள்ளும் இலங்கையர்கள் அங்கு புதிய நாஜிகளால் தாக்கப்படக் கூடிய அபாய நிலை உள்ளது. கறுப்பின மக்களுக்கு எதிராக இந்தத் தாக்குதல்கள் நடாத்தப்படுவதால் இலங்கையர்கள் இது குறித்து அவதானமாக இருக்க வேண்டும் என்று வெளியுறவு அமைச்சு அலுவலகம் நேற்று முன்தினம் எச்சரித்துள்ளது.

ஜெர்மனியில் அரசியல் தஞ்சம் கோரும் வெளிநாட்டவர்களே பொதுவாகத் தாக்குதல்களுக்கு உள்ளாவதாக வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஜெர்மனியில் இன்று 40,000க்கும் சற்று அதிகமான இலங்கையர்கள் குறிப்பாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மண்டைதீவில் இராணுவம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறையிலிருந்து நேற்று முன்தினம் வெளியேறி மண்கும்பான் கருப்பாச்சி அம்மன் கோயிலடியில் தரித்து நின்ற இராணுவம் நேற்று

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய செய்தியாளர் கறுப்பசாமி வெளியேற்ற உத்தரவிற்கு ஜனதா தளம் கண்டனம்

(டில்லி)

கொழும்பிலுள்ள அனைத்து இந்திய வானொலிச் செய்தியாளர் கறுப்பசாமியை சிறிலங்காவில் இருந்து வெளியேற்றுவதான அரசின் நடவடிக்கையை ஜனதாதள் கண்டனம் செய்திருக்கிறது.

அதை மறுபரிசீலனை செய்யுமாறு ஜனதாதள் சிறிலங்கா அரசை வற்புறுத்தியுள்ளது.

இந்த வெளியேற்ற உத்தரவை விலக்கிக் கொள்வது இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவுகளின் நன்மைக்கு ஏற்றதாக இருக்கும் என்று நேற்று புதுடில்லியில் வெளியான அறிக்கை ஒன்றில் ஜனதாதள் குறிப்பிட்டுள்ளது.

## தாவரவியல் ஐங்கரநேசனின் யூனிவேர்சல்

கந்தர்மடம் — யாழ்ப்பாணம்


## 90-ம் நாள் நினைவஞ்சலி



கப்டன் பாண்டியன்

துரைசிங்கம் கிருஷ்ணகுமார் [புருஸ்லி]

திதி: 20-10-1991

வீரஜனனம் 09.07.1972 — வீரமரணம் 23.07.1991

(சிறிலங்கா இராணுவத்துடன் நேரடி மோதலில் வீரமரணமடைந்தார்)

வடமியூர் ஈன்றெடுத்த மாவீரா
உன் உடலில்தான் எத்தனை விழுப்புண்களப்பா
கடும் சமரில் கட்டைக்காட்டில் கப்டன் பாண்டியா
காலனுக்கேன் இரையானாய் ஐயா
தாயிற் சிறந்த தாய்நாடு மீட்க நீ சாவை மதிக்காது
சமர் புரிந்தாய்
வேண்டிய தமிழ் ஈழம் கிடைக்கும் உன் வீரச்
செயலையும் நாடு மதிக்கும்
காட்டிய உன் வீரம் கண்டு கிஷ்ணகுமாரே
நாட்டிலுள்ளோர் பெருமைப் பட்டார்
வீட்டிலுள்ள ... "புருஸ்லி"

## நிர்ணய விலை அடிப்படையில் புடைவைகள்

(ஈச்சமோட்டை)

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பூநகரி பல:நோ. கூ. சங்கம் நிர்ணய அடிப்படையில் உடுப்புகளை விநியோகித்து வருகின்றது. அண்மையில் லொறிகள் மூலம் கொழும்பில் இருந்து கொண்டு வரப்பட்ட உடுபுடைவைகளை முன்மாதிரி அடிப்படையில் பூநகரி மக்களுக்கு நிர்ணய விலையில் சங்கம் விநியோகித்து வருகின்றது. (43)

## நேட்டோவும் அணுஆயுதக் குறைப்பு

(ரோம்)

ஐரோப்பாவிலுள்ள குறுந்தொலைவு அணுஆயுதங்களை எண்பது சத வீதமாக குறைக்கப் போவதாக 'நேட்டோ' அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் இத்தாலியில் கூட்டிய மாநாடு ஒன்றில் கலந்து கொண்ட நேட்டோ பாதுகாப்பு அமைச்சர்கள் இதனைத் தெரிவித்தனர்.

இதே வேளை பல்வேறு ஐரோப்பிய தளங்களில் அணுகுண்டுகள் பொருத்தப்பட்ட சுமார் 700 விமானங்களை தொடர்ந்து நிறுத்தி வைப்பது எனவும் நேட்டோ முடிவு செய்துள்ளது.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்பு களுக்கான விரிவுரைகள்

கலைமுதற்தேர்வு (G. A. Q)

வர்த்தகமுதற் தேர்வு (FIRST IN COMMERCE)

மேற்படி பட்டப்பாட...



யாழ். ஸ்ரீதர் திரையரங்கில்

## மாங்குளம் தகர்ப்பு

[விவரணப்படம்]

## இனியொரு விதி

[குறும்படம்]

ஆகியன அரங்கம் நிறைந்த காட்சிகளாக காண்பிக்கப்படுகின்றன.

தினசரி ஒரு காட்சியும் (4 மணிக்கும்) சனி, ஞாயிறுகளில் இரண்டு காட்சிகளும் (4, 6 மணிக்கும்) காண்பிக்கப்படும்.

[B/3203]


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 28 10.1922

மறைவு 09-11-1989

திதி 20-10-1991

திரு. சின்னப்பொடி சூரர்

எமையெல்லாம் அன்புடனும், பண்புடனும் வாழ வைத்த அன்புத்தெய்வமே இரண்டு ஆண்டு சென்றாலும் உங்கள் நினைவு எங்களை விட்டு மாறாது உங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

விழிவால் வாடும்
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.
(R/1856)

## 90-ம் நாள் நினைவஞ்சலி

## ம.கிழக்கு சமாதான மாநாடு 'மட்றிட்'டில் நடக்கும்

(ஜெருசலேம்)

மத்திய கிழக்கு சமாதான மாநாடு எதிர்வரும்முப்பதாம் திகதி ஸ்பெயின் தலைநகர் மட்றிட் நகரில் நடைபெறும் என்று நேற்று முன்னிரவு ஜெருசலேம் நகரில் அமெரிக்க வெளிநாட்டமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் அறிவித்தார். அப்போது சோவியத் வெளியுறவு அமைச்சர் பொறிஸ் ரொங்கின்னும் உடனிருந்தார்,

இம் மாநாட்டில் கலந்து கொள்பவர்களுக்கு அமெரிக்காவும், சோவியத் யூனியனும் இணைந்து அழைப்பு விடுத்துள்ளன. அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்புஷ், சோவியத் அதிபர் கொர்பசேவ் ஆகியோர் மாநாட்டைத் தொடக்கி வைக்கவுள்ளனர். மூன்று தினங்கள் வரை நீடிக்க திட்டமிடப் பட்டிருக்கும் இம் மாநாட்டில் இஸ்ரேல், எகிப்து, லெபனான், சிரியா, ஜோர்தான் ஆகிய அரபு நாடுகளுடன் கூட்டாகவும் தனித்தனியாகவும் பேச்சு நடத்தும். ஜோர்தான் குழுவில் பாலஸ்தீனிய விடுதலை இயக்கப் பிரதிநிதிகளாக கிழக்கு ஜெருசலேமில் வாழும் பாலஸ்தீனியர்கள் சிலர் இடம்பெறவுள்ளனர்.

இதேவேளை இஸ்ரேலும் சோவியத் யூனியனும் முழு அளவிலான இராஜதந்திர உறவுகளை இருபத்தி நான்கு வருட இடைவெளிக்குப் பின் மீண்டும் ஏற்படுத்திக் கொண்டுள்ளன, இதற்கான உடன்படிக்கை ஒன்றில் இஸ்ரேலிய வெளிநாட்டமைச்சர் டேவிட் லெவியும், சோவியத் வெளிநாட்டமைச்சர் பொறிஸ் ரொங்கின்னும் ஜெருசலேமில் நேற்றுமுன்தினம் கைச்சாத்திட்டனர்.


வெளிநாட்டுத் தபால்களை இன்றே ஒப்படைப்பீர்! துரித தபால் சேவைக்கு

DHL WORLDWIDE EXPRESS

DHL

C/o Cosmos Marketing Services
120 (200), K.K.S. Road,
JAFFNA.

(B/3296)


கூட்டம் காலவரையின்றி

## ஒத்திவைப்பு

தமிழீழ ஆய்வு நிறுவனத்தில் 21-10-91 இல் நடைபெறவிருந்த உற்பத்தி சம்பந்தமான கலந்துரையாடல் நிகழ்வு காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மறு அறிவித்தல் பத்திரிகை மூலம் தரப்படும்.

(B/3356)

வேண்டிய தமிழ் ஈழம் கிடைக்கும் உன் வீரச்
செயலையும் நாடு மதிக்கும்
காட்டிய உன் தீரம் கண்டு கிஷ்ணகுமாரே
நாட்டிலுள்ளோர் பெருமைப் பட்டார்
வீட்டிலுள்ள பெற்றோர் நண்பர்கள் ''புருஸ்லி''
என்றான்
காண் போம் என ஏங்குகிறார்

23-07-1991 அன்று கட்டைக்காட்டு நேரடி மோதலில் இவருடன் வீரமரணமடைந்த சக போராளிகளையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

20-10-91 (இன்று) எமகன் இல்லத்தில் நிகழும் வீட்டுக்கிரியைகளில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் பங்குகொள்ளும்படி அன்புடன் அழைகின்றோம்.

சங்கானை மேற்கு,
வடலியடைப்பு.

பெற்றோர், சகோதரர்கள்,
மைத்துனர், மருமகன்,
மாமன்மார்.

(B/3349)

---

தேர்வு
*(FIRST IN COMMERCE)*

மேற்படி பட்டப்பாடநெறிகளுக்கான விரிவுரைகள் யாவும் 20-10-91 ஞாயிறு பி.ப. 2மணிக்கு ஆரம்பமாகின்றன.

உதவிப் பதிவாளர்
**பட்டப்படிப்புகள்**
**கல்லூரி**
148/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(/3331)

---

## கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் கவனத்திற்கு
## நீர்ப்பாசனத் திணைக்கள அறிவித்தல்

எனது பரிவின் கீழ் பராமரிக்கப்படும் கீழ்வரும் குளங்களின் கீழ் பெரும்போக பயிர்ச்செய்கை செய்யும் சகல விவசாயிகளும் கீழே கொடுக்கப்பட்ட கால அட்டவணைப்படி குளங்களிலிருந்து நீர் விநியோகம் செய்யப்படும் என்பதை அறியத் தருகிறேன்.

| குளத்தின் பெயர் | முதல் நீர்வியோகம் திகதி | முதல் நீர்விநியோகம் செய்யும்போது இருக்க வேண்டிய ஆழம் | இறுதி நீர்விநியோக திகதி |
|---|---|---|---|
| இரணைமடுக்குளம் | 05 11 1991 | 11 அடி | 25 2.92 |
| அக்கராயன் குளம் | 10 11.1991 | 10 அடி | 15.2 92 |
| புதுமுறிப்புக்குளம் | 10 11 1991 | 10 அடி | 15 2.92 |
| கல்மடுக்குளம் | 05 11 1991 | 7 அடி | 15 2 92 |

இவ் அட்டவணைக்கு ஏற்றபடி பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை ஆரம்பித்து எமக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எந்திரி. எஸ். எஸ். சிவகுமார்
நீர்ப்பாசன எந்திரி,
கிளிநொச்சிப்பிரிவு.

கில்லன் வீதி,
கிளிநொச்சி

(B/3354)

---

## 90-ம் நாள் நினைவஞ்சலி



வீரஜனனம்
01 07.1971

வீர மரணம்
23.07.1991

திதி:
20.10.1991

### வீரவேங்கை சுருளி

விடுதலைப்புலி வீரனே சுருளி!
இன்று நீ மாவீரர் மயானத்திலா உறங்குகிறாய்-
நம்பமுடியவில்லை
கட்டைக்காட்டிலே சிங்கள கயவரை
அழிக்க நீ களப்பலியானாய்
நம்ப முடியவில்லையடா- அப்பன்
ஆம்! வீரனே நீ ஏந்திய துப்பாக்கி
நாளை தமிழ் ஈழம் அமைக்க
வரலாறு படைக்கும்

இன்று நடைபெறும் அந்தியேட்டி கிரிகைகளில் சக போராளிகளையும், நண்பர்களையும், உறவினர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆனைக்குட்டி மதவடி
தெல்லிப்பழை

குடும்பத்தினர்

(B/3350)

---

நிகழ்வு காலவரையின்றி ஒத்திவைக்கப்படுகின்றது.
மறு அறிவித்தல் பத்திரிகை மூலம் தரப்படும்.

(B/3356)

---

## நினைவு கூருகின்றோம்...

### 1991 - 10 - 20

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னாரில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்

சோதிவு இறங்குதுறையில் இந்தியப் படையினர் உலங்கு வானூர்தியிலிருந்து மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்

யாழ். கண்டுக்குழி, உரும்பராய்ப் பகுதிகளில் இந்தியப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 6 தமிழர்கள்

1988 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தேசவிரோதிகளுடனான மோதலில் வீரமரணமெய்திய
பிறேம் (மரியதாஸ் கோகிலவாசன் - கொக்குவில்)

1990 ஆம் ஆண்டு மல்லாகம் பகுதியில் சிறிலங்கா படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் மரணமடைந்த தமிழ்ப் பெண்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B 3353)

# சிறிலங்கா இராணுவம் கோரிநின்ற சூழ்நிலையில் தன்னம்பிக்கையற்ற ஒப்ரேசன் வலம்புரி

**யாழ்:** குடாநாட்டில் சிறிலங்கா இராணுவம் பெரும் இராணுவ முஸ்தீபை மேற்கொண்டுள்ளது. இந்த முஸ்தீபைத் தொடர்ந்து யாழ். குடா நாட்டில் 'ஒபரேசன் வலம்புரி' என்னும் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

இவ் இராணுவ நடவடிக்கையின் ஒரு பகுதியாக சிறிலங்கா இராணுவம் ஊர்காவற்றுறை முகாமில் இருந்து வெளியேறி மண்டைதீவு வரையில் வந்துள்ளது. ஆனால் ஒபரேசன் வலம்புரியின் முழுத்திட்டமும் இதுவாக மட்டும் இருக்க முடியாது ஏனெனில் ஊர்காவற்றுறை முகாமிலிருந்து வெளியேறி சிறிலங்கா இராணுவம் மண்டைதீவு வரையில் வருவதற்கு இவ்வாறு பெரிய முஸ்தீபுத் தேவைப்பட்டிருக்காது.

யாழ். குடாநாட்டில் ஒரு பெரும் இராணுவ நடவடிக்கையை தனது பதவிக்காலத்திற்குள் செய்வதற்கு மிக விரைவில் ஓய்வு பெறவுள்ள சிறிலங்கா இராணுவத் தளபதி மேற்கொள்ள வேண்டும் என்பதில் ஆவலாகவே இருந்துள்ளார். ஆனால் இராணுவ நடவடிக்கை பற்றிய திட்டத்தை அவர்கள் மிகவும் இரகசியமாகவே வைத்துள்ளார்கள்.

## மணலாறு மோதல் அனுபவம்

மணலாறு மோதலே சிறிலங்கா இராணுவத்தினர் யாழ். குடாநாட்டின் மீதான இராணுவ நடவடிக்கையை இரகசியமாக வைத்திருப்பதற்குக் காரணமாகும். மணலாற்றுப் பிரதேசத்தில் உள்ள 14-15 வரையிலான விடுதலைப் புலிகளின் முகாம்களை அழித்தொழிக்கும் நடவடிக்கையாகவே 'மின்னல் தாக்குதல்' எனப் பெயரிட்டு சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட தாக்குதல் அவர்கள் எதிர்பார்த்ததைப்போல் வெற்றியளிக்கவில்லை.

மணலாற்றின் அடர்ந்த காட்டை நிலைவைத்துக் கொளுத்தவும் காட்டு ஓரத்தில் இருந்த புலிகளின் மூன்று முகாம்களை மட்டுமே அவர்களால் அணுகவும் முடிந்தது. 'மின்னல் தாக்குதல்' எனப் பெயரிட்டு ஆரம்பிக்கப்பட்ட இராணுவநடவடிக்கை மின்னலைப் போல்வேகமாகச் செயற்படவில்லை. பெரும் இழப்புக்களுடன் பின்வாங்க வேண்டியிருந்தது.

ஆனையிறவுப் போரில் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்ட குறிப்பிடக்கூடிய உயிரிழப்பின் காரணமாக மணலாற்றில் பெரும் எதிர்ப்பு இருக்காது என சிறிலங்கா இராணுவத் தரப்பு திட்டமிட்டிருக்கக் கூடும் ஆனால் சிறிலங்கா அரசதரப்பு மணலாற்றுப் போரை பெரும்காட்டுப் போர் என வர்ணித்தது மிகவும் பொருந்தும். விமானப்படையும், கடற்படையும், இராணுவமும் சேர்ந்து இத்தாக்குதலை நடத்தின.

ஆனால் மணலாற்றுப் போரில் சிறிலங்கா இராணுவம் தனது இலக்கை எட்டாமல் பின்வாங்க நேரிட்டமையால் இராணுவத்திற்கு ஏற்பட்ட தோல்வியாக வெளி நாட்டு செய்தி ஸ்தாபனங்களால் விமரிசிக்கப்பட்டன இதனால் சில செய்தி ஸ்தாபனங்கள் மீதுசிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் ஆத்திரம் கொண்டு விமர்சித்ததும் உண்டு.

## இரகசிய நடவடிக்கையும் பொய்களும்

இந்நிலையில்தான் யாழ். மாவட்டம் மீதான இராணுவ நடவடிக்கையை மிகவும் இரகசியமாக வைத்துக் கொள்வதில் சிறிலங்கா இராணுவம் அக்கறையாக உள்ளது. இலக்கை முன்னரே அறிவித்துவிட்டு இலக்கை அடையாதுவிடில் தோல்வியை தழுவிக் கொண்டமையை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். இதேவேளை இலக்கை அறிவிக்காமல் போரை நடத்தி எந்நேரத்திலும் அதை நிறுத்தி நமது இலக்கு இது தான் எனக் கூறி வெற்றி பெற்றதாகப் பறைசாற்றிக் கொள்ளவும் முடியும்.

இதேவேளை மணலாற்றுப் போர் முடிந்த பின்னர் யாழ் மாவட்டத்தில் நடைபெற்ற இராணுவ முஸ்தீபை சிறிலங்கா இராணுவத் தரப்பு மறைப்பதில் மிகவும் அக்கறையும் காட்டி வந்தது. ஆனையிறவிற்கும், முல்லைத்தீவிற்கும் இடையில் விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தை மீட்கும் இராணுவ நடவடிக்கைத் திட்டமொன்றை இராணுவம் தயாரித்துள்ளது. எதிர்வரும் மாரி காலத்தில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆனையிறவிற்கும் வவுனியாவிற்கும் இடைப்பட்ட பகுதி அடுத்த மாதம் தமது பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் மீட்கப்பட்டுவிடும் என சிறிலங்கா இராணுவத் தளபதி அறிவித்தார்.

அதேவேளை தீவுப்பகுதியில் இராணுவ முஸ்தீபு தீவிரமாகி உள்ளது என வெளிவந்த செய்திக்கு பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் மறுப்புத் தெரிவித்தார் சிறிலங்கா இராணுவத்திற்கு தீவுப்பகுதியில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளும் எண்ணம் இல்லை எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை வடமராட்சியில் மக்களை கோவில்களில் தங்கியிருக்குமாறு அறிவித்துவிட்டு தீவுப்பகுதியில் இராணுவம் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. வடமராட்சி நடவடிக்கை பற்றி தகவல் ஏதும் வெளியிடமுடியாது அது இரகசியமானது என இராணுவப் பேச்சாளர் கேணல் முனசிங்கா பத்திரிகையாளர் மத்தியில் பேசும்போது தெரிவித்தார்.

சிறிலங்கா இராணுவத்தரப்பினர் இவ்வாறு தாக்குதல் பற்றியோ தமது இலக்கு நோக்கியோ வெளியிடாமைக்கு விடுதலைப் புலிகளின் கவனத்தை பல்வேறு திசைகளிலும் திசை திருப்புவதற்காகவும் இருக்கலாம். ஆனால், விடுதலைப் புலிகளைப் பொறுத்த எப்பொழுதும் கேந்திர நிலையங்களின் பாதுகாப்பு பற்றிய சிந்தனை அவர்களிடம் உள்ளது. ஆகையினால், சிறிலங்கா இராணுவத்தினரின் திசை திருப்பல் நடவடிக்கைகளோ அன்றி ஏமாற்றுக்களோ அவர்களின் ஏற்பாடுகளில் மாற்றத்தை ஏற்படுத்தப் போவதில்லை.

## இராணுவம் கூறும் சாதகமான சூழ்நிலை

இவ்வளவு ஒளிப்பு மறைப்புக்களுக்கும், ஏமாற்றுக்களுக்கும் மேற்கொள்ளும் சிறிலங்கா இராணுவம் தான் எதிர்பார்த்திருந்ததாகக் கூறிக் கொண்ட ஓர் சாதகமான நிலையில் இருந்தே நடவடிக்கைக்குத் திட்டமிட்டுள்ளது என்பதை மறுக்க முடியாது.

கடந்த வருடம் விடுதலைப் புலிகளுடன் போர் ஆரம்பித்த போது இராணுவத் தரப்பில் இருந்து சிறிலங்கா அரசியல் வாதிகள் பற்றிப் பலமான விமர்சனம் முன் வைக்கப்பட்டது. அரசியல் அணுகுமுறையில் உள்ள ஸ்திரமின்மையை இராணுவத்தினர் கண்டனம் செய்தனர் இராணுவத்தில் இருந்து ஓய்வுபெற்றவரான கேணல் சுனில் பீரிஸ், 'நிலவில் பேச்சுவார்த்தை கோடையில் சண்டை. கோடைகாலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப் பும் மாகாணசபையும், மாரிகாலத்தில் புலிகளும், இந்தியாவும்' என அரசியல் ஸ்திரமின்மையைக் கண்டனம் செய்தார்.

ஆனால், இந்நிலை தற்பொழுது இல்லை தென்னிலங்கையில் எழுந்துள்ள அரசியல் நெருக்கடியும், பேரினவாத சக்திகளின் பலம் ஓங்கியுள்ளமையையும், இராணுவத்தினரின் பலத்தை அரசியலில் அதிகரித்துள்ளது இராணுவத்திற்கு எதிராக ஒருவர் குரல் எழுப்பவோ அன்றிக் கட்டளை இடவோ தயாராகவில்லை.

மேலும், இராணுவம் கடந்த காலத்தில் குறிப்பிட்டது போன்று நிதி ஒதுக்கீட்டில் குறைபாடு இருப்பதாகத் தெரியவில்லை. செலவீட்டிற்கு போதிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இராணுவத்தை நோக்கியே நாட்டின் சகல வளங்களும் திருப்பப்பட்டுள்ளன.

அத்தோடு பெருமளவு ஆயுதக் கொள்வனவும், நவீனரக யுத்த விமானங்களும், கவச வாகனங்களும், நீண்ட தூரப் பீரங்கிகளும், நவீன கடற்படைப் படகுகளும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, சிறிலங்கா அரசாங்கமும், இராணுவத் தரப்பினரும் திட்டமிட்டு மேற்கொண்ட பொருளாதாரத் தடையும், அதனால் ஏற்பட்ட நெருக்கடிகளும் தமிழ்ப் பிரதேசங்களில் பொருளாதார நெருக்கடிகளையும், பற்றாக்குறைகளையும் ஏற்படுத்தியுள்ளன கடந்த வருடம் போர் ஆரம்பிக்கப்பட்ட போது தனியாக் இராணுவ நடவடிக்கையில் வெற்றி கொள்ள முடியாது. பொருளாதாரத் தடையும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற இராணுவத்தினரினதும் சிங்கள புத்திஜீவிகளினதும் கோரிக்கை நிறைவு செய்யப்பட்டு சுமார் ஒரு வருடத்தின் பின்னர் இத்தாக்குதல் திட்டமிடப்பட்டுள்ளது.

இவற்றைவிட இலங்கைக்கு வெளியிலுள்ள புறச் சூழலும் தற்பொழுது தமக்குச் சாதகமாக இருப்பதாக சிறிலங்கா இராணுவம் கருதுகின்றது. இதுவரையில் இந்தியாவில் இருந்தே வெடிப் பொருட்களும் ஏனைய வசதிகளும் புலிகள் பெற்று வந்தார்கள் என்றும் இதனாலேயே புலிகளை முறியடிப்பதில் சிரமமாக இருந்தது எனவும் சிறிலங்கா தரப்பு முன்னர் அறிவித்து வந்தது. ஆனால், தற்பொழுது தமிழ் நாட்டில் புலிகளுக்கு எதிரான நடவடிக்கை தீவிரமாக இருப்பதினால், தமக்குச் சாதகமான சூழ்நிலை இருப்பதாக சிறிலங்கா இராணுவத் தரப்பு கூறிக் கொள்கின்றது.

இந்நிலையில் சிறிலங்கா இராணுவம் இலக்கை வெளியிடாத ஒபரேசன் வலம்புரியை மதிப்பீடு செய்வதென்பது சிரமமான விடயமே. ஆனால், இராணுவம் தான் எதிர்பார்த்த சகல வசதிகளோடும், அரசியற் சூழலோடும் நடத்தும் ஒபரேசன் வலம்புரியின் நடவடிக்கைபற்றிக் கூறாமை இராணுவ இரகசியமாக இருப்பினும், இலக்கை வெளியிடாமை இராணுவத்தின் தன்னம்பிக்கையீனத்தையே காட்டுவதாகவுள்ளது என்று விமர்சிப்பதிலும் தவறு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

- ஜெயா -

## வேலை வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

ஒப்பந்த அடிப்படையில் மன்னார் மாவட்டத்தில் விதை சேகரிப்புக்கென உடனடியாக 100பேருக்கு வேலை

விண்ணப்பித்த இளைப்பாறியோருக்கு

## ஆங்கில ஆசிரியர் நியமன நேர்முகப் பரீட்சை

கம்போடிய தேர்தலின்போது

## அமைதி காக்கும் பணிக்கு ஐ. நா. குழு செல்லும்

## சைக்கிள் வழிப்பறி

(ஈச்சமோட்டை)

ஈச்சமோட்டையை சேர்ந்த செ ஜெயராஜ் என்ற சிறுவ

(யாழ்ப்பாணம்)

ஒப்பந்த அடிப்படையில் மன்னார் மாவட்டத்தில் விதை சேகரிப்புக்கென உடனடியாக 100பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்க தமிழீழ ஆய்வு நிறுவனம் முன்வந்துள்ளது. வேலை வாய்ப்பு அற்று இருப்போரும், அகதிமுகாமில் இருப்போரும் தாவடியில் உள்ள ஆய்வுநிறுவன மையப் பணியகத்தில் தொடர்பு கொள்ளும்படி தமிழீழ ஆய்வு நிறுவனம் கேட்டுள்ளது.

## ஆங்கில ஆசிரியர் நியமனம் நேர்முகப் பரீட்சை

பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பிப்பதற்காகச் சேவையில் இருந்து இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்கள், பொதுச் சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் ஆங்கிலம் கற்பிக்கத் தகுதி வாய்ந்தவர்களை சேவையிலீடுபடுத்தும் திட்டத்தின்கீழ் பாடசாலைகளில் வெற்றிடமாகவுள்ள ஆங்கில ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த சகலருக்கும் மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் நியமனம் செய்யப்பட்ட குழுவினரால் விரைவில் நேர்முகப் பரீட்சை ஒன்று அவ்வப்பாடசாலைகளில் நடாத்தப்படவுள்ளதாக கல்வி உயர்கல்வி அமைச்சின் ஆங்கில மொழி இணைப்புப்பிரிவு சகல மாகாணக் கல்விச் செயலாளர்களுக்கும் தெரியப்படுத்தியுள்ளது.

விண்ணப்பப் பத்திரத்தை இக்குழு ஒரு மாதிரி எழுத்துப் பரீட்சையாகக் கணித்து இலக்கணம், எழுத்தறிவு என்பனவற்றுக்குப் புள்ளிகள் வழங்க வேண்டும் என்றும்,

நேர்முகப்பரீட்சையில் விண்ணப்பித்தவரின் தகுதி, பழக்கவழக்கம், ஆளுமை பேச்சுத்திறன் ஆகியவற்றுக்கும் புள்ளிகள் இடப்பட்டு தகுதியானவர் தெரிவுசெய்யப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியரல்லாதவர்கள் திசைகோட்படுத்தல் பாடநெறிப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சைக் குழுவில் பாடசாலை அதிபர், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர், மாகாண/கோட்டக் கல்வி காரியாலய உத்தியோகத்தர் ஆகியோர் அடங்குவர். இதில் ஒரு உறுப்பினர் ஆங்கிலத்தில் தேர்ச்சிபெற்றவராக இருக்கவேண்டும்.

## ஆறு பஸ்கள் தீக்கிரை ஜேர்மனியில் சம்பவம்

(பேர்லின்)

ஜேர்மனியில் அகதிகள் பயன்படுத்தவென இருந்த ஆறு பஸ்கள் தீவைத்துக் கொளுத்தப்பட்டுள்ளன. இங்கு அரசியல் தஞ்சம் கோருபவர்களை ஏற்றிச் செல்வதற்கென வைக்கப்பட்டிருந்த இந்த பஸ்கள் தீவைத்து கொளுத்தப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளன வலதுசாரித்தீவிரவாதிகளே இந்த நாசகாரச் செயலுக்கு காரணம் என்று பொலிசார் தெரிவித்து உள்ளனர்.

இதேவேளை புகலிடம் கோருவோரைத் தாக்கும் நவநாகரிகர்களைத் தேடும் வேட்டையிலீடுபட்டுள்ள ஜேர்மன் பொலிசார் பன்னிரண்டு கிழக்கு ஜேர்மன் நகர்களிலுள்ள நாற்பது தரிப்பிடங்களில் திடீர் சோதனை மேற்கொண்டனர்.

## கொர்பியுடன் 8 குடியரசுகள் உடன்படிக்கைகைச்சாத்து

சோவியத் அதிபர் மிகையில் கொர்பசேவும் ஏனைய எட்டு குடியரசுகளின் தலைவர்களும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளனர் நேற்று முன்தினம் மொஸ்கோவில் கைச்சாத்தான இவ்வுடன்படிக்கைக்கு அஸர்பைஜானும் உக்ரேனும் கையெழுத்திடும் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும் அவை கையெழுத்திடவில்லை ஜோர்ஜியாவும், மோல்டேவியாவும் பொருளாதார, விஞ்ஞான தொழில்நுட்ப ஒத்துழைப்பிற்கான இவ் உடன்படிக்கையில் கைச்சாத்திட ஆரம்பம் முதல் எதிர்ப்புதெரிவித்து வந்தது தெரிந்ததே.

## அமைதி காக்கும் பணிக்கு ஐ. நா. குழு செல்லும்

(பனொம்பென்)

கம்போடியாவில் நடைபெற இருக்கும் ஐ நா மேற்பார்வையின் கீழான தேர்தல்களின்போது அமைதி காக்கும் நடவடிக்கைகளுக்காக முன்கூட்டியே ஒரு குழுவை அனுப்பி வைப்பதற்கு ஐ நா. பாதுகாப்புச்சபை முடிவுசெய்துள்ளது.

இந்த நடவடிக்கைகளுக்கு நூறு கோடி டொலர் செலவாகும் என எதிர்பார்க்கப்படுவதாக பாதுகாப்புச் சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதேவேளை இந்தத் தேர்தல்களின் முடிவுகளை தங்களுக்குச் சாதகமாக்க தாய் எல்லைப்பகுதி மீதான ஆயிரக்கணக்கான அகதிகளை கட்டாயப்படுத்துவதற்கு கிமரூஜ் முயற்சித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

இவர்களின் இந்த நடவடிக்கைகளை ஐ நா. சபை அதிகாரிகளும், பாதுகாப்புச்சபையின் நிரந்தர உறுப்பினர்களும் கண்டித்துள்ளனர்.

(ஈச்சமோட்டை)

ஈச்சமோட்டையை சேர்ந்த செ ஜெயராஜ் என்ற இளைஞனுடைய புதிய யமாஹா சைக்கிளை கொழும்புத்துறை மேற்கு சனசக்தியில் வைத்து வழிமறிக்கப்பட்டு திருடர் கோஷ்டியினர் பறித்துச் சென்றுள்ளனர் இச்சம்பவம் சென்ற புதன் கிழமை இடம் பெற்றுள்ளது.

(43)

## சொற்பொழிவு ஒத்திவைப்பு கலை ப. கழகம் அறிவிப்பு

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் வாரந்தோறும் பிரதி ஞாயிற்றுக் கிழமைகளில் நடத்தி வந்த தொடர் சொற்பொழிவு இவ்வாரம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப் பட்டுள்ளது. இந்நிகழ்ச்சி பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும் என்று கலை பண்பாட்டுக்கழகம் விடுத்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## மழை வேண்டி மழைப் பதிகம்

(நமது நிருபர்)

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினரும் நாயன்மார் கட்டு சைவசமய அபிவிருத்திக் கழகத்தினரும் இணைந்து ஆலயங்கள் தோறும் மழைப் பதிகம் பாடிவருகின்றனர். நேற்று முன்தினம் அரியாலை சித்தி விநாயகர் ஆலயத்தில் இந்நிகழ்ச்சி இடம் பெற்றது. இன்று மாலை நாயன்மார் கட்டு ராஜராஜேஸ்வரி பேய்ச்சி அம்பாள் ஆலயத்தில் மழைப் பதிகம் பாடுதல் நிகழவுள்ளது

## குவைத்திலிருந்து திரும்பிய விண்ணப்பிக்காதோர் உடன் விண்ணப்பிக்கவும்

(யாழ்ப்பாணம்)

வளைகுடாப் போரைத் தொடர்ந்து குவைத்திலிருந்து நாடு திரும்பியோருக்கு நஷ்ட ஈடு வழங்கும் நோக்குடன் யாழ் செயலகத்தினால் விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டது தெரிந்ததே இதற்கு இதுவரை விண்ணப்பிக்காதவர்கள் உடனடியாகத் தமது விண்ணப்பத்தினைச் செயலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

மேற்படி நஷ்டஈட்டுக்கு இதுவரை எழுநூற்றி ஐந்து பேர் விண்ணப்பித்துள்ளனர். இவ்விண்ணப்பங்கள் யாவும் கடந்த 3 ஆம் திகதி கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன

இதுவரை விண்ணப்பிக்காதவர்களுக்கான இறுதிச் சந்தர்ப்பம் இதுவாகும் என யாழ் அரசாங்க அதிபர் மாணிக்கவாசகர் மேலும் தெரிவித்துள்ளார். (உ

# காணவில்லை

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க (I C R C) வாகனம் ஒன்றிலிருந்து, 18-10-91) வெள்ளிக்கிழமை இரவு வேம்படி மகளிர் பாடசாலைக்கு முன்னால் வைத்து குவி வெளிச்ச மின்குமிழ் (Focus Lamp) வெட்டி எடுக்கப் பட்டுள்ளது. பொதுமக்கள் சேவைநலன் கருதி இதனை எடுத்தவர்கள் திருப்பி ஒப்படைக்குமாறு வேண்டுகின்றோம். தகவல்தெரிந்தவர்கள் சங்கப் பணிமனையுடன் உடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தலைவர்,
Mr. Claudio Barazini, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்,
Chief Delegate, 120, கோவில் வீதி,
I. C. R. C, Jaffna. யாழ்ப்பாணம்.

(R- 1857)

# 75ஆம் நாள் நினைவஞ்சலி

வீரஜனனம் 04-10-1974



வீரமரணம் 08-08-1991

## வீரவேங்கை பதுமநிதி
(சிறீதரன் சுதாசினி)
(மயிலிட்டி)

பாய்கின்ற புலிக்கூட்டம் ''பதுமநிதி'' ஆனாய்
படுகளத்தில் போராடி மாவீரர் ஆனாய்
காயாத நினைவாகிக் கண்மூடிப்போனாய்
கனகாலம் வாழாமல் வரலாறாய் ஆனாய்
தாய் மாமர் மூவர்கள் தமிழீழப் போரில்
தணலாகிப் போனார்கள் ஆனாலும் எங்கள்
தாகத் தமிழாகித் தமிழீழம் வந்து
தணிகின்ற வரையுந்தான் தாகங்கள் தீரா!

இவருடன் ஆனையிறவுப் போரில் வீரமரணத்தை தழுவிய அனைத்து வீரவேங்கைகளுக்கும் துணைப்படை வீரர்களுக்கும் பொதுமக்களுக்கும் எமது அஞ்சலியை செலுத்துகின்றோம். இத்துடன் 21 - 10 - 1991 இல்

## ஜப்பான் கடனுதவி

(கொழும்பு)

அரசாங்கத்தின் பொருளாதார மீளமைப்புத் திட்டங்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக ஜப்பான் நானூறு கோடி ரூபா கடனுதவியை அளிக்க முன்வந்திருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்கா கூறியுள்ளார்.

## பிற்போடப்பட்டது

(நமது நிருபர்)

கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையத்தால் இன்று கொண்டாடுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இருபத்தோராவது ஆண்டு நிறைவு விழா தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப் பட்டிருப்பதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட

லும், பல வருடங்களுக்கு முன்னர் இச் சட்டத்தால் பாதிப்படைந்தவர்களில் பலர் இறந்து விட்டார்கள் என்றும் மேலும் பலர் முதியவர்களாகி விட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் சகல அரச திணைக்களங்களுக்கும் மேற்படி வேலை சம்பந்தமான சுற்று நிருபம்பொது நிர்வாக உள்ளூராட்சி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

வட மாநில ஓய்வூதிய சங்கம் இந்த சுற்று நிருபம் பற்றி சமீபத்தில் யாழ். வை. எம். சி ஏ. மண்டபத்தில் நடாத்திய கூட்டத்தில் உப குழு ஒன்றைத் தெரிவு செய்தது.

இக்குழு சிங்கள மொழிச் சட்டத்தால் பாதிப்படைந்த நூற்றுக் கணக்கானவர்களின் முறைப்பாடுகளை ஏற்று தரம் பிரித்து வருகிறது. (தி)

வெளிவாரி

தரம்பிள்ளை தெரிவித்தார்.

உயர் கல்வி வளர்ச்சியில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப் படும் இவ் வெளிவாரிப் பட்டப்படிப்புக்கானசகல வேலைகளையும் இப் பல்கலைக் கழகத்தின் வெளிவாரிப் பட்டப்படிப்புக்கான அலுவலகம் துரிதகதியில் மேற்கொண்டமையால் பட்டப்படிப்பைக் குறுகிய காலத்தில் ஆரம்பித்து வைக்க முடிந்ததாகவும்

# சதி முயற்சி முடிவடையவில்லை இப்பொழுதே ஆரம்பமாகிறது

(கண்டி)

மக்களால் அதிகாரத்துக்குக் கொண்டு வரப்பட்ட அரசாங்கத்தைக் கவிழ்க்கும் நோக்கத்துடன் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சதி முயற்சி முடிவடைந்து விட்டதாகக் கருதி விடக் கூடாது. இதுவே ஓர் ஆரம்பமாகிறது. இது ஓர் முக்கியமற்றது என அலட்சியம் செய்துவிட முடியாது என கண்டியில் நேற்று நடைபெற்ற ஜயவிஜய என்ற மாதிரி மக்கள் தோட்டத்தில் உரையாற்றுகையில்சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில் அது தங்களது உயிரைப் பலி கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

வடக்குக் கிழக்குப் பிரச்சினை காமினிதிஸநாயக்காவாலேயே உருவானது. நான் உள்ளூராட்சி அமைச்சராகப் பதவி வகித்த காலத்தில் காமினிதிஸநாயக்கா வடபகுதியில் மாவட்ட சபைத் தேர்தல்களை குழப்புவதில் ஈடுபட்டார். இந்தத் தேர்தல் சீர்குலைக்கப்பட்டதன் காரணமாக வடபகுதி இளைஞர்கள் வன்முறையில் ஈடுபடத் தொடங்கினார்கள் இதற்கான ஆதாரங்கள் அறிக்கையாக உள்ளது.

—பிரேமதாசா

மேலும் ஜே வி. பி யை வளர்த்தவர் லலித் அத்துலத்முதலியே எனக் குற்றஞ் சாட்டிய சிறிலங்கா ஜனாதிபதி லலித் தேசிய பந்தோபஸ்து அமைச்சராக பதவி வகித்த காலத்தில் அதனைக் கட்டுப்படுத்தத் தவறி விட்டார். ஆனால் அதன் பின் ஜே வி பி யைக் கட்டுப் படுத்த தன்னால் முடிந்தது எனச் சுட்டிக் காட்டினார்.

யாழ்ப்பாண

சென்ஜோசெப் வித்தியாலயம் நல்லூர் இந்து தமிழ்ப் பெண்கள் பாடசாலை ஆகியவற்றிலும் உறவினர் வீடுகளிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

காலையில் இருந்து மாலை வரையில் வீதியில் குழந்தைகள், வயோதிபர்கள், நோயாளிகளை அழைத்துக் கொண்டு மக்கள் இடம் பெயர்ந்து சென்று கொண்டிருந்ததைக் காண முடிந்தது.

நண்பகல் 12-00 மணிக்குப் பிற்பாடு அசாந்திய அமைதி நிலவிய போதும் பொதுமக்கள் பீதியுடன் காணப்பட்டனர். (21)

ஜேர்மனியில்

இலங்கைத் தமிழர்கள் அதிகமாக வாழ்கிறார்கள்.

நாஜிகளின் வன்முறைகள் ஜெர்மனியில் தொடருமாயின் சிறீலங்காவில் தாம் வரும் தாக்கப்படமாட்டார் என்பதற்கு உத்தரவாதமில்லை என்று முன்னாள் ராஜதந்திரியான இந்தப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

ஜெர்மனியில் சமீபத்திய தாக்குதல் சம்பவமொன்றில் எஸ். ராதாகணேசன் என்ற தமிழ் இளைஞர் தனது வலக் காலை இழந்துள்ளார். புகையிரதப் பாதையில் விபத்தொன்றில் இவர் காலை இழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் வலுக்கட்டாயமாக இவர் கால் புகையிரதப்பாதையில் மூன்று

இலங்கையில்

லண்டனிலுள்ள அவ்வமைப்பு மறுத்துவிட்டது.

இதேவேளைதங்களை அடையாளம்காட்ட விரும்பாத அக்குழுவின் உறுப்பினர்கள் சிலர் பிரிட்டனும் சீனாவும் இலங்கைக்கு ஆயுதங்கள் வழங்குவதாகக் குற்றம் சாட்டினர்

பயிலுனர்

ரியர்களைத் தெரிவுசெய்வதற்கான போட்டிப்பரீட்சை பற்றிய அறிவிப்பு நேற்றுமுன்தினம் வெளியான அரசாங்க வர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளது தெரிந்ததே.

சுகாதாரம்

தாரி.

வடமராட்சிப்பகுதியில் மருதங்கேணி, கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலிருந்து இடம்பெயர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் கோப்பாய், யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் தென்மராட்சிப் பகுதியிலும் உள்ள பாடசாலைகளில் தஞ்சமடைந்திருப்பது தெரிந்ததே. (தி)

புலிகளின்

கையுக்கு சுற்றிவட்டமிட்டது. அதேவேளை இடைக்கிடை கவியர் தாக்குதலையும் மேற்கொண்டது.

காலை 11 மணியளவில் சிறிலங்கா குண்டுவீச்சு விமானம்

## ஒரு ரெலோ உறுப்பினர் பலி

(மட்டக்களப்பு)

பெரியபோரதீவுப் பகுதியில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் ரெலோ உறுப்பினரான கருணா பலியாகியுள்ளார். இச்சம்பவத்தில் பெண்மணி ஒருவர் உட்பட இருவர் காயமடைந்து மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும், மேலும் ஆறு பேர் கடத்திச் செல்லப்பட்டுவிட்டதாகவும் ரெலோ இயக்கம் கூறியுள்ளது

## சமூகம் தரவும்

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியில் முதலுதவிச் சிகிச்சை பயின்றவர்களையும், முதலுதவிச் சிகிச்சை பயில விரும்புகின்றவர்களையும் நாளை திங்கட்கிழமை காலை ஒன்பது மணிக்கு கல்லூரியில் கூடும்படி மாணவர் அவை வேண்டுகோள் விடுத்துள்ளது மேலும் மாணவ ரவையின் நிர்வாக உறுப்பினர்கள் அனைவரையும் இக் கலந்துரையாடலுக்கு தவறாது சமூகம் தரும்படியும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மண்டைதீவில்

மண்டைதீவிற்கு வந்துசேர்ந்தது.

மண்டைதீவிற்குவந்த இராணுவத்தினர் யாழ்-பண்ணை வீதியில் மண்டைதீவுப்பக்கமாகவுள்ள கொட்டில்களுக்குத் தீ வைத்தனர். அதேவேளை, யாழ் கரையோரப்பகுதியிலிரு

வீரர்களுக்கும் பொதுமக்களுக்கும் எமது அஞ்சலியை செலுத்துகின்றோம். இத்துடன் 21 - 10 - 1991 இல் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையில்கலந்து கொள்ளுமாறு சகல மக்களையும் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

சிவன் வீதி,
உரும்பராய் கிழக்கு.
(R/1858)

# மரண அறிவித்தல்

## சௌந்தரராஜன் விஜயகுமாரி சபிலா

(ராஜன்) ★ (விஜி) ★ சபிலா
கணவன் மனைவி மகள்

கோண்டாவில் மேற்கு கலட்டி ஒழுங்கையை சேர்ந்த தர்மலிங்கம், (இளைப்பாறிய அஞ்சல் நிலைய ஊழியர் மானிப்பாய்) புஷ்பராணி ஆகியோரின் புதல்வன் சௌந்தரராஜன் (ராஜன்)

சங்கானை முருகமூர்த்தி ஒழுங்கையை சேர்ந்த செல்லையா, சிவபாக்கியம் ஆகியோரின் புதல்வி விஜயகுமாரி (விஜி)

ஜேர்மனியை சேர்ந்த சௌந்தரராஜன், விஜயகுமாரியின் புதல்வி சபிலா ஆகியோர் 1991-10-18 அன்று ஜேர்மனியில் அகாலமரணமாயினர்.

இவர்களில் சௌந்தரராஜன் குலராணி (சுவிஸ்) இராஜேஸ்வரி, சுபாஜினி, செல்வராஜன் (கனடா) மாலினி ஆகியோரின் சகோதரனும், கயிலைநாதன் (சுவிஸ்) சண்முகரத்தினம் (பட்டணசபை சங்கானை), யோகேஸ்வரன் (சன் வீடியோ கொம்பிளெக்ஸ் கோண்டாவில்) ஹரிமோகன் (பட்டணசபை, மானிப்பாய்) ஆகியோரின் மைத்துனனும் ஆவார்.

இவர்களில் விஜயகுமாரி தவஞானலட்சுமி, நஞ்சிதகுமாரி ஆகியோரின் சகோதரியும், சிவஞானசுந்தரம் (டுபாக்கோ கொம்பனி), காலம் சென்ற செல்வநாயகம் (வீரகேசரி) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

கலட்டி வீதி,
கோண்டாவில் மேற்கு (R/1860)
19-10-91.

தகவல்
பொன்னையா தர்மலிங்கம்

திரதகதியல் மேற்கொண்ட மையால் பட்டப்படிப்பைக் குறுகிய காலத்தில் ஆரம்பித்து வைக்க முடிந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். வெளிவாரி மாணவர்களுக்கான அடையாள அட்டைகளை இன்று மேற்படி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தபால் மூலம் மாணவர்களுக்கு அனுப்பி வைக்கப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. (ஈ)

கப்பட்டது. ஆனால் வலுக்கட்டாயமாக இவர் கால் புகையிரதப்பாலத்தில் மூன்று பேரால் துண்டிக்கப்பட்டது என்று பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பான விசாரணையை மேற்கொண்ட ஜேர்மன்பொலிஸாரும் போதிய ஆதாரம் இல்லை என்று வழக்கைக் கைவிட்டுள்ளது.

### ஏரிக்கரை

எழுதப்பட்டிருப்பதாகக் குற்றப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போது லண்டனிலிருந்து வருகின்ற ரொனி டி மெல்லிற்காக இந்த வழக்கை திருமதி மல்லிகா டி சில்வா தாக்கல் செய்துள்ளார்.

இந்தக் கட்டுரைகள் தனிப்பட்ட முறையிலும், பதவி வழியிலும் தன்னை அவமானப்படுத்தியுள்ளதாக ரொனி டி மெல் தனது குற்றப் பத்திரிகையில் தெரிவித்துள்ளார்.

### வெற்றிகள்

ஆண்டு ஒட்டம 'வழியில் முப்பது இந்திய படையினர் கொல்லப்பட்ட தாக்குதலைத் தலைமை தாங்கி நடாத்தியவர். அத்துடன் மட்டக்களப்பில் புலிகளின் முகாம் ஒன்றை இந்தியப் படையினர் சுற்றிவளைத்துத் தாக்கிய சமயம் தீரத்துடன் எதிர்த்தாக்குதலை நடாத்தி முற்றுகையை உடைத்ததுடன் இந்தியப் படையினருக்கு பெரும்சேதத்தையும் விளைவித்து மேற்படி மோதலில் முக்கிய பங்காற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஈ)

...தாக்குதலையும் மேற் கொண்டது.

காலை 11 மணியளவில் சிறிலங்கா குண்டுவீச்சு விமானம் ஒன்று கொட்டடிப் பகுதிக் கரையோரத்தில் சில குண்டுகளை வீசியது.

அதேவேளை சிறிலங்கா விமானப்படை விமானங்கள் மீதும், உலங்குவானூர்தி மீதும் விடுதலைப் புலிகளால் எதிர்த்தாக்குதல்கள் மேற் கொள்ளப்பட்டன. இதைத் தொடர்ந்தே பல ஆயிரம் அடி உயரத்தில் முகில்களுக்கு மேலாகப் பறந்த சிறிலங்கா விமானங்கள் விரைவில் திரும்பிச் சென்றன.

வீதியில் மண்டைதீவுப்பக்கமாகவுள்ள கொட்டில்களுக்குத் தீ வைத்தனர். அதேவேளை, யாழ் கரையோரப்பகுதியிலிருந்து புலிகள்மேற்கொண்டதாக்குதலினால் இராணுவத்தினர் பின்வாங்கி மண்டைதீவுப் பக்கம் சென்றனர்.

### யாழ்நகர்

காலை நடைபெற்ற தாக்குதலில் குகநாதன் (வயது 9) ராஜசெல்வமணி (வயது 50) ஆகிய இருவரும் மாலைநடைபெற்ற தாக்குதலில் ஸ்ரீபன் (வயது 20) என்பவரும் காயமடைந்துள்ளனர். (ஈ) (21)
(85)

# மரண அறிவித்தல்

## திருமதி கமலாவதி பரராசசேகரம்

திருமதி கமலாவதி பரராசசேகரம் காலமாகிவிட்டார். இவர் திரு கு பரராசசேகரம் D Y S O, கிளிநொச்சி) அவர்களின் அன்பு மனைவியும், அம்பிகா, கௌசிகன், ஒளவை ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற த.வே தியாகராசாவின் அன்பு மகளும், திருமதி பு நமசிவாயம், பத்மாவதி, திருஞானவதி, வேலாயுதபிள்ளை (அம்பிகா டிஸ்பென்சரி), சிவகுமார் (மக்கள் வங்கி, சுன்னாகம்), செல்வநாயகி ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார். அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று 20-10-91 (ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் 3 மணிக்குச் சரசாலை மயானத்தில் நடைபெறும்.

தகவல்
ச. நமசிவாயம்
(அம்பிகா டிஸ்பென்சரி)

(R- 1861)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.